பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 14உ (30—8—67) புதன் ★ வெளியூர்: ஆவணி 15உ (31—8—67) வியாழன் [இதழ்: 65

# செப்டம்பர் 1-ல்



## காமராசரைக் கவனியுங்கள்!

★

வருகிற வெள்ளிக்கிழமையன்று புதுடில்லியில் அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டி கூடுகிறதாம்!

★ மத்திய அரசு ஊழியர்களுக்குக் கிராக்கிப் படி—
★ பாங்கிகளை சமூக உடமையாக்குதல்—
★ பொது இன்ஷ்யூரன்சை நாட்டுடைமையாக்குதல்—
★ முன்னாள் மன்னர்களுக்கான உதவித் தொகை நிறுத்தம்—
★ விலைவாசிகளைக் காக்க உடனடியாகக் கட்டுப் படுத்துதல்—

இப்படிப் பல முக்கியப் பிரச்சினைகள் பற்றிய பரிசீலனை அப்போது நடைபெற இருக்கிறதாம்!

அதற்காகக் காமராசர். 'இப்போதிருந்தே தீவிரம் காட்டிவருகிறார்'என்பதாக, தமிழ்நாடு காங்கிரசின் புதிய 'துண்டு நாளேடு' ஒன்று, 'விசேடச் செய்தி' போட்டிருக்கிறது!

**மொழிப் பிரச்சினை பற்றியும் அப்போது காங்கிரசுக் கமிட்டி விவாதிக்க இருக்கிறது-**

**அது குறித்து, 'பெரியவர்' எவ்விதத் தீவிரமும் காட்டுவதாக அந்தப் பத்திரிகை எழுதக் காணோம்!**

ஆனால் 'மெயில்' இதழ், ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறது!

**"காங்கிரசுக் கமிட்டியில், தமிழகத்தின் தலையாய பிரதிநிதி காமராசராகவே இருக்கிறார்"**

என்று காலமறிந்து ஒரு கடமையைச் செய்திருக்கிறார்—'மெயில்' இதழின் புதுடில்லி நிருபர்!

மொழிப் பிரச்சினையில், எவ்வித ஐயத்திற்கும் இடமில்லாமல் தமிழக அரசு ஏற்கனவே குறிப்பு அனுப்பிவிட்டது!

அதனையே மீண்டும் வலியுறுத்தி—தமிழக அரசின் நிலையை உறுதிப்படுத்தியிருக்கிறார் கோவை செய்தியாளர்களிடையே அறிஞர் அண்ணா.

**"இந்தியா வேண்டுமென்றால், இந்தியைத் தமிழகத்தின் மீது திணிக்காதீர்கள்" என்று மாணவர்கள், தலைமையமைச்சரிடமே அறிவுறுத்திவிட்டனர்!**

**"'அந்நிய மொழி' என்ற பெயரில் ஆங்கிலத்தை அகற்ற நினைப்பதோ—'வட்டார மொழிகளுக்குத்தானே சிறப்பு' என்ற அனுசரிப்பில் இந்திக்கு தேசிய முக்கியத்துவம் தேட நினைப்பதோ—மொழித்துறையில் விடுவிக்க முடியாத சிக்கலைஉருவாக்கிவிடும்—நாடு சின்னாபின்னமாகி விடும்" என்பதனை, அரசியல் கட்சிகள்—கல்வியாளர்கள்—பொது மனிதர்கள்—பத்திரிகையாளர்கள் ஆகிய அனைவரும் எடுத்துக்காட்டி விட்டனர்!**

காமராசர் இந்தப் பிரச்சினையில், ஒரு தனி மனிதர் அல்லர்!

★ **காங்கிரசின் தலைவர்**
★ **தமிழகத்தின் பிரதிநிதி**

இதில் வழவழப்புக்கு இடம் இல்லை! காலம் தாழ்த்த வேண்டிய அவசியம் கிடையாது! என்ன சொல்லப் போகிறார் காமராசர்?

தமிழை விட்டுக்கொடுக்கமாட்டார் என்பது வேறு விஷயம்—தெரிந்த விஷயமும் கூட!

★ இந்தி மட்டுமே தேசிய மொழி என்பதனை ஏற்கிறாரா?
★ இந்தியுடன் ஆங்கிலமும் காலவரையறையின்றி அரசியல் சட்ட திருத்தத்துடன் நீடிக்க வேண்டுமென்கிறாரா?
★ மும்மொழித் திட்டம் என்ற சமாதானப் போர்வையில் அவரும் ஒளிந்துகொள்வாரா?

இம்மூன்றில் ஏதாவது ஒன்றினை, செப்டம்பர் 1-ந்தேதியன்று, காமராசரிடமிருந்து தமிழகம் எதிர்பார்க்கிறது!

மூன்றுக்கும் இடையில் ஏதாவது ஒன்றைச் சொல்வாரானால், அது—தப்பித்துக் கொள்ளும் வழியே தவிர—'காங்கிரசில் உள்ள தமிழகத்தின் பிரதிநிதி' என்ற அடைமொழிக்குப் பங்கம் வராத செயல் அல்ல!

## குறுவை அறுவடைக்குப் பின்

# உணவில் தன்னிறைவு

### அறிஞர் அண்ணா தரும் மகிழ்வூட்டும் செய்தி

குன்னூர், ஆக. 29—

"வருகிற அக்டோபர் திங்களில் அறுவடையானதும், மற்ற மாநிலங்களுக்கும் அரிசி கொடுத்துதவக்கூடிய வகையில் தமிழ்நாடு, உணவு உற்பத்தியில் ஒரு திருப்பத்தையடையும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் தெரிவித்தார்கள். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"மாநிலங்களில் உற்பத்தியாகும் பருப்பு வகைகளில் நியாயமான அளவுக்குத் தமிழ் நாட்டுக்கு ஒதுக்குமாறு ஏற்கனவே மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம்.

தாவர எண்ணெய்களின் விலை இறங்குமுகமாக உள்ளது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

அக்டோபர் குறுவை அறுவடைக்குப்பிறகு படி அரிசித் திட்டம் மாநிலம் முழுமைக்கும் விரிவு படுத்தப்படும்.

மத்திய அமைச்சரவைக்கும் எனக்கும் உள்ள தொடர்பு மகிழ்ச்சிதரத்தக்க விதத்திலேயேஇருந்து வருகிறது. அவர்கள் அனுதாபத்துடனும் அன்புடனும் நடந்து கொள்கிறார்கள்."

## 'வேட்டி'யால் விளையும் வேதனை--சிவசேனையின் நெறிகெட்ட செயல்

**தென்னகப் பாணியில் வேட்டி கட்டியிருப்பவரைக் கண்ட மாத்திரத்தில்—பம்பாய் சிவசேனைக் கூட்டத்தினர்—மிரண்ட மாடுபோல் ஆகின்றனர்!**

**பம்பாயின் பல பகுதிகளில் வேட்டி கட்டிச் செல்வது, பாதுகாப்பு இல்லாத தன்மையை ஏற்படுத்தியிருக்கிறது!**

**வேட்டி கட்டிய மனிதரைக் கண்ட மாத்திரத்தில் ஒரு விசில் சத்தம் எழுகிறது—இது, சிவசேனையினரின் சிழ்க்கை ஒலி! உடன், எங்கிருந்தோ குண்டர்கள் வருகிறார்கள்—தாக்குதல் துவங்குகிறது!**

**பட்டப் பகலில் ஓடும் இரயிலில் இதுபோன்ற வெறிச் செயல்கள் பகிரங்கமாக நடைபெறுகின்றன!**

**அருகில் இருப்பவர்கள், ஈவு இரக்கமற்ற பார்வையாளர்களாகத்தான் இருக்கிறார்கள்!**

"வேட்டி கட்டிய 'பாவ'த்துக்காக நாங்களே 'லால் பாக்'கில் பட்ட அவதிதான் முன்பே தெரிந்ததாயிற்றே!"

—நாடாளுமன்ற தி. மு. க உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தியும், கம்யூனிஸ்டு உறுப்பினர் உமாநாத்தும் பம்பாய் சென்று திரும்பிய பின்னர், தங்கள் தங்கள் கட்சிகளுக்குக் கொடுத்திருக்கும் சிவசேனை இயக்கம் பற்றிய அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது.

## 'மது வேண்டாம்' என்பதில் மயக்கம்!



கோவையில் தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடம், தமிழக அரசின் மதுவிலக்குக் கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார் அறிஞர் அண்ணா!

"மைசூரையும் கேரளத்தையும் போல் நீங்களும் மதுவிலக்கை ரத்து செய்வீர்களா?" என்று கேட்ட செய்தியாளர்களிடம்,

**"மதுவிலக்குக் கொள்கையில் நான் 'மயக்கம்' கொண்டவன் என்ற உறுதியை மீண்டும் வலியுறுத்தவே விரும்புகிறேன்."**

என்று பதிலளித்திருக்கிறார். இத்தொடர்பில் அண்ணா அவர்கள் உபயோகித்த அழகான ஆங்கில வரிகள் இதுதான்!


"I reiterate my original view that I am an addict to the principle of Prohibition."

### சிவசேனை:

## 'பரிவட்டம்' கட்டுகிறார் பாட்டீல்!

### உண்மை தெரிகிறது--சொரூபம் வெளியாகிறது!

**மகாராட்டிரர்களை எப்படியும் பாதுகாப்பாராம்--- காங்கிரசு மேலிடமே--இப்போது என்ன பதில்?**



**"பம்பாய் நகரின் எண்ணங்கள்—செயல்கள் ஆகிய அனைத்துக்குமான மத்தியப் புள்ளியாக இப்போது சிவசேனை இயக்கம் இருக்கிறது"**

என்று பம்பாய் பிரதேசக் காங்கிரசுக் கூட்டமொன்றில் பேசிய முன்னாள் மத்திய இரயில்வே அமைச்சர் எஸ். கே. பாட்டீல் குறிப்பிட்டிருக்கிறார்.


"மகாராட்டிரர்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ஒரு நிலை எழுந்ததே இதற்குக் காரணம்" என்று தெரிவித்த பாட்டீல் மேலும் பேசியிருப்பதாவது :—

**"இந்த நிலைமைகளையெல்லாம் நான் கூர்மையாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்; ஆனால், இதற்கு ஒரு முடிவு காணாமல் அமைதியடையமாட்டேன்!**

"மகாராட்டிரர்களின் குறைபாடுகளை எப்படியும் களையப் பாடுபடுவேன்! அவர்களுக்கு நீதி பெற்றுத் தரும் வரையில் ஓயமாட்டேன்!

**"கடந்த 20 ஆண்டுகளாகவே இதுதான் எனது கொள்கை!"**

## ஊதிய முடக்கம்--அண்ணா கருத்து



**"விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக மற்றையமுயற்சிகளையெல்லாம் விட்டுவிட்டு, ஊதியத்தை மட்டும் முடக்க முயலுவதை வரவேற்க முடியவில்லை!**

**"ஊதிய உயர்வு ஏன் கோரப்படுகிறது என்ற காரணத்தை முதலில் புரிந்துகொள்ளவேண்டும்!**

**"விலைவாசியைக் குறைக்க ஏதோ ஒரு இடத்தில் கட்டுப்பாடு தேவை; அது, ஊதியத்தை முடக்குவதனால் மட்டும் கிட்டிவிடாது!"**

—கோவையில் செய்தியாளரிடை




வெண்புறாச் சேனைக்கு சிகரெட் லைட்டர்கள்—கத்திகள்—கரண்ட் டெஸ்டர்கள்—பனியன்கள்—சட்டைகள்—துண்டுகள்—மணிபர்சுகள் ஆகியனவற்றை அளித்த 'கொடை'யாளர்களின் பெயர்ப்பட்டியல் 'நாளை வெளிவரும்' என்றார்கள்; மறுநாள் பத்திரிகை வந்தது-பட்டியலைக் காணோம்!

ஒருவேளை, 'நம் நாடு' கட்டுரையின் விளைவோ?

பொருள்கள் சந்தேகத்துக்குரியனவா? கொடுத்தவர்கள் சந்தேகப் பேர்வழிகளா? அல்லது கொடுக்கப்பட்டதுதான் உண்மை இல்லையா?

'குடிகாரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு' என்பார்களே—அதுபோலல்லவா இருக்கிறது?

நம் நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ. எம்பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 14 (30—8—67) புதன்

# பொருளற்ற மதவெறி

காஷ்மீர் நகரங்களான ஜம்முவிலும், ஸ்ரீநகரிலும் வகுப்புக் கலவரம் தலைகாட்டியிருக்கிறது. கொள்ளிவைத்தலும், சூறையாடலும், சொத்துக்களை நாசப்படுத்தலும் நிகழ்ந்துள்ளன.

அமைதியை நிலைநாட்ட ஊரடங்குச் சட்டத்தின் துணையையும், இராணுவத்தின் உதவியையும் நாடவேண்டிய அளவுக்கு அங்கு குழப்பம் இருந்துவருகிறது. கண்ணீர்ப்புகைக்கு அடங்காத கலகக்காரர்களை அடக்க ஆகாயத்தை நோக்கிச் சுட்டு, அமைதியை உருவாக்க வேண்டிய கட்டத்துக்கு அங்கு வகுப்புக் கலவரம் உச்சம் பெற்றிருக்கிறது.

கலவரத்தை ஒடுக்கி அமைதியை மீண்டும் நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்ட காவல் துறையினர் சிலர், கலகக்காரர்கள் வீசிய கல்லடிக்கு உள்ளாகியிருக்கின்றனர். கலகக்காரர்களின் கல் வீச்சுக்கு, எந்தக் குற்றமும் செய்தறியாத குடிமக்கள் சிலரும் இரையாகியிருக்கக்கூடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

இக்கலவரத்தை அடக்கக் காவல்துறை மூலம் காஷ்மீர் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டிக்க வேண்டி கடையடைப்பும் நடைபெற்றிருக்கிறது. இக்கடையடைப்பில் முஸ்லிம்கள் பங்கு கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் கடைகளை எப்பொழுதும்போல் திறந்து வியாபாரம் செய்திருக்கின்றனர்.

இந்த வெறுக்கத்தகுந்த கலவரத்துக்கு வித்திட்டுத் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்த உயர் சாதிக்காரர்களான காஷ்மீர் பண்டிதர்களாவர். பொருளற்றதோர் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு, இப்பண்டிதர்கள் இந்த வகுப்புக் கலவரத்தை அங்கு மூட்டிவிட்டிருக்கின்றனர்.

வயதுவந்த—படித்த ஓர் இந்துப் பெண், தன்னுடன் ஒரே அலுவலகத்தில் பணி புரிந்துவரும் ஒரு முஸ்லிம இளைஞரை மணந்துகொண்டாள். இம்மணத்தைக் காரணமாகக் காட்டித்தான், பண்டிதர்கள், கலவரத் தீயை மூட்டியுள்ளனர்.

பண்டிதர்களின் தூண்டுதலினாலோ அல்லது தன்னிச்சையாகவோ— தன் பெண்ணைக் கடத்திச்சென்று அவருடைய விருப்பத்துக்கு மாறாக முஸ்லிம் இளைஞர் மணந்துகொண்டிருக்கின்றார் எனக் காவல் துறையிடம், அப்பெண்ணின் தாயார் புகார் செய்தாள். அப்பெண்ணையும், அவளுடைய முஸ்லிம் கணவனையும் காவல் நிலையத்துக்குக் கொண்டுவரச்செய்து, பெண்ணைப் பெற்றவள் முன்னிலையில், பெண்ணின் கருத்தைக் காவல் துறை அதிகாரிகள் கேட்டனர்; அதற்கு அப்பெண், தன் சொந்த விருப்பத்தின் மீதுதான் குறிப்பிட்ட முஸ்லிம் இளைஞனை மணந்துகொண்டதாகக் கூறி, தாயின் புகாரை மறுத்துவிட்டாள். பெண்ணின் கருத்தினைத் தெரிந்துகொண்ட காவல் துறை அதிகாரிகள், அப்பெண்ணை அவளுடைய முஸ்லிம் கணவனுடன் அனுப்பிவிட்டிருக்கின்றனர்.

தான் கூறிய புகாரைத் தனது மகளே மறுத்துவிட்டிருப்பதைக் கண்ட பின்னராவது, தாய் மனமாற்றம் அடைந்திருக்க வேண்டும். எங்கிருந்தாலும், தான் பெற்ற மகள் மகிழ்ச்சிகரமாக வாழட்டும் என்ற சிறந்த நினைப்பைத் தாய் கொண்டிருக்க வேண்டும்.

அத்தகைய உயர்ந்த நினைப்பைத் தாய் கொண்டிருக்கும் பட்சத்தில், வகுப்புத் தீயை மூட்டி, அதை அணைந்து போகவிடாமல் தொடர்ந்து பாதுகாத்துவரக்கூடிய பண்டிதர்களுக்கு, அதற்கான ஒரு வாய்ப்பே கிடைத்திருக்க முடியாது. மறைந்துவருகின்ற மதக் காய்ச்சலும் மேலும் மறைந்தொழிய வழி ஏற்பட்டிருக்கும்.

மறுபடியும் பெண்ணைப் பெற்ற தாய், பெண்ணின் வயதைப் பற்றிய ஐயப்பாட்டைக் கிளப்பினாள். பத்தாவது படித்த அத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற பெண்ணின் பிறந்த தேதியைக் காட்டி, பெண், தன்னிச்சையாகத் திருமணம் செய்துகொள்ளக்கூடிய வயதினை அடையவில்லை என்ற வாதத்தைக் கிளப்பினாள். தாயின் இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டு. பெண்ணின் உண்மையான வயதைக் கண்டறிய, அப்பெண் மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டாள். பெண்ணைப் பரிசோதித்த மருத்துவர்கள், 'பெண்ணின் வயது பதினெட்டுக்கும் மேலாகிறது' என அறிவித்துவிட்டனர்.

மருத்துவப் பரிசோதனையின் மூலம் முடிவு கட்டப்பட்ட பெண்ணின் வயதைத் தெரிந்துகொண்ட பின்னராவது, பெண்ணின் போக்கில் விட்டுவிடத் துணிந்திருக்க வேண்டும்—அப்பெண்ணைப் பெற்றவள்; ஆனால் அந்தத் தாய், பெண்ணின் மணத்தை முறித்துவிட வேண்டும் என்பதிலேயே பிடிவாதம் காட்டத் துணிந்தாள்.

இதற்கிடையில், சில இந்துப் பண்டிதர்கள் அப்பெண்ணைச் சந்தித்து, மணந்துகொண்டிருக்கின்ற முஸ்லிமை உதறித் தள்ளிவிட்டுத் தாயுடன் திரும்பிவிடும்படி வேண்டிக்கொண்டனர். அதற்கு அப்பெண், பத்தாயிரம்—இருபதாயிரம் ரூபாய் இல்லாமல் ஒரு இந்துவைத் தன்னால் மணந்துகொள்ளுவது என்பது முடியாதது என்றும், அப்பணத்தைத் தன்னை வேண்டிக்கொள்ளும் பண்டிதர்கள் கொடுக்கத் துணிந்தால், முஸ்லிம் கணவரை ஒதுக்கிவிட்டுத் தாயுடன் வந்துவிட ஆயத்தமாக இருப்பதாகவும் கூறினாள்.

பெண் கூறியபடி, அப்பணத்தைக் கொடுக்கப் பண்டிதர்கள் துணியவில்லை. அதற்கு மாறாக வாயை மூடிக்கொண்டு தங்களுடைய மத வெறிக்கு முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டு பேசா மடந்தைகளாகத் திரும்பிவிட்டிருக்கின்றனர்.

குறிப்பிட்ட இந்துப் பெண் முஸ்லிம் வாலிபனை மணந்துகொண்டதால், ஏதோ இந்து மதத்துக்கு அழிவு வந்துவிட்டது என இந்துப் பண்டிதர்கள் உண்மையில் கருதிக்கொண்டிருக்கும் பட்சத்தில், அந்தப் பெண் கோரியபடி பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு—பெண்ணை மீட்டு—பெற்ற பெரியவளுடன் மீண்டும் சேர்த்திருக்க வேண்டும். பண்டிதர்கள், இதற்குத் தயாராக இல்லை. பணத்தைக் கொடுத்து முஸ்லிம் வாலிபனின் அரவணைப்பிலிருந்து அப்பெண்ணை மீட்டு, தங்கள் கருத்துப்படி இந்து மதத்தை அழிந்துபோக விடாமல் காப்பாற்றியிருக்க வேண்டும். இதைச் செய்யவில்லை பண்டிதர்கள். இதற்கு மாறாக, ஜம்முவையும் ஸ்ரீநகரையும் வகுப்புக் கலவரத்துக்குள்ளாக்கி இருக்கின்றனர்.

இந்து மதத்தைக் காப்பாற்றுவதற்காக, இத்திருமணத்தைக் காரணமாகக் காட்டி, இந்துப் பண்டிதர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதில் உண்மை இருப்பதாகக்கூட நம்புவதற்கில்லை. இப்பொழுது முஸ்லிம் வாலிபனை மணந்துகொண்டிருக்கின்ற பெண்ணின தமக்கை எற்கனவே ஒரு முஸ்லிமைத்தான் மணந்துகொண்டிருக்கின்றார். இத்திருமணத்தால் இந்து மதத்துக்கு ஆபத்து வந்துவிட்டதாகக் கலவரம் செய்யத் துணிந்துள்ள பண்டிதர்கள், இப்பெண்ணின் தமக்கை ஒரு முஸ்லிமை மணந்துகொண்டபொழுது எங்கே போயிருந்தார்கள்? தமக்கையின் திருமணத்தால் இந்து மதம் கெடவில்லை—தங்கையின் திருமணத்தால தான் இந்து மதம கெட்டுவிடக்கூடும் என்பது, இந்தப் பண்டிதர்களின் கருத்தா?

தமக்கை ஒரு முஸ்லிமை மணந்துகொண்டபொழுது அது பற்றிக் கவலையற்றுக்கிடந்த இந்த வீணர்கள், அதே குடும்பத்தைச் சேர்ந்த தங்கை ஒரு முஸ்லிமை மணந்துகொண்டதைக் கண்டதும் ஏன் கொக்கரிக்க வேண்டும்? தேவையற்ற வகுப்புக் கலவரத்தைச் செய்திட வேண்டும்?

பண்டிதர்களின் இன்றையக் கலவரத்துக்குக் காரணம் எதுவாக இருந்திட்டாலும், அவர்கள் கூறுவதுபோல் இந்துப் பெண் ஒருத்தி முஸ்லிம் வாலிபனை மணந்து கெட்டுவிட்டாள் என்பதல்ல என்பது மட்டும் உறுதியிலும் உறுதியாகும்.

—கா. க.

சின்ன விஷயம்

# ஆபத்தான விளையாட்டு!

'ஆசை வெட்கம் அறியாது' என்பார்கள். அற்பத்தனமான ஆசைக் கனவுகளில் ஈடுபடுகிற இந்திக்கார வெறியர்களுக்கு வெட்கம் எங்கே இருக்கப்போகிறது?

அன்னப் பாலுக்கு அலைந்துகொண்டிருந்தவனைப் போய், 'ஆகா! நீதான் அரசன்!' என்றால் கேட்கவா வேண்டும்? அந்த நிலை அவர்களுக்கு!

அதனால்தான், இந்திக்கார வெறியர்கள், தலை-கால் தெரியாமல் குதிக்கிறார்கள்!

தேசியக் கீதம் இருக்கிறதே, தேசியக் கீதம்—வங்கத்து மாகவி ரவீந்திரநாத் தாகூரால் இயற்றப்பட்ட 'ஜனகணமண'—அதை, இந்தியில் மொழிபெயர்த்து விடுதலை நாளில் பாடினார்களாம்!

'கிடக்கிறது கிடக்கட்டும்; கிழவனை எடுத்து மணையிலே வை' என்கிற கதையில், 'யார் என்ன பேசினால் நமக்கென்ன? நாம் சந்தடிச் சாக்கில்—விடுதலை நாள் விழாக் களிப்பில் வேலையை முடித்துக்கொள்வோம்' என்று காரியத்தில் கண்ணாக இருக்கிறார்கள்!

இந்தி மொழியை, 'தேசிய மொழி' என்று அரசியல் சட்டத்தில் அவர்கள் ஏற்றிய கதையே அதுதானே!

அவர்கள் அன்று விதைத்த விஷமத்துக்குத் தானே இன்று நாடே பதில் சொல்லிக்கொண்டிருக்கிறது.

அதோடா போயிற்று? 'சப்பாணிக்கு நொண்டி சண்டப்பிரசண்டன்' என்பார்கள்; அது போல் டில்லிப் பல்கலைக் கழகத்து அதிகாரப் பீடத்தில் அமர்ந்திருக்கும் ஆதிக்கக்காரர்கள், இனி, **அந்த மத்தியப் பல்கலைக் கழகத்தில்** பணியாற்ற வருகிற ஆசிரியர்களுக்கு 'இந்தி கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டும்' என்றோர் விதி செய்திருக்கிறார்களாம்.

'நம்மைக் கேட்பாருமில்லை—மேய்ப்பாருமில்லை; அரசாங்கம் நமக்கு ஆதரவாக இருக்கிறது' என்ற அகம்பாவம், அவர்களுக்கு இந்த வறட்டுத் தைரியத்தைத் தருகிறது!

இப்போதே கலைத்துறையில் மட்டும் 13-ல் 9 பேர் இந்தி பேசாத மாநிலத்துக்காரர்கள். உலகத்துப் பொது அறிவையெல்லாம் தங்கள் மூளைக்குள் அடக்கி வைத்துக்கொண்டு பலதுறை மேதைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற அந்தப் பேராசிரியர்கள், இனி, இந்தி படித்தாக வேண்டுமாம்!

முதிர்ந்த ஒரு பேராசிரியர் சொன்னாராம்—**'தான் இந்திக்காரன் என்ற ஒரு தகுதியை மட்டுமே வைத்திருக்கும் ஒரு இந்தி ஆசிரியனிடம்,** இந்த வயதில் நாங்கள் பாடம் கேட்டுக்கொண்டிருக்க முடியாது' என்று—வெறுப்பும் வேதனையும் தொனிக்கக் குறிப்பிட்டாராம்!

'தேசிய மொழி'—'இணைப்பு மொழி'—என்று இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருப்பதாலேயே, 'அந்தஸ்து உயர்ந்துவிட்டது இந்திக்கு' என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற இந்திக்கார முட்டாள்கள், தென்னகத்து மக்களைச் சமிக்ஞை காட்டிச் சண்டைக்கு அழைக்கிறார்கள்!

'இந்தி' வெறியர்களின் மொழி வெறியைப் படம் பிடித்துக்காட்டியிருக்கும் 'இந்து' சிறப்புச் செய்தியாளர், 'கடையிலே கட்டினாலும் அழுகற் பூசணிக்காய் அழுகல்தானே' என்ற தொனியில் பூட்டகமாக இடித்தும் காட்டுகிறார்!

'தேசியக் கீதம்' என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற பாடல் வங்க மொழியில் இருப்பதைக்கூடத் தாங்கிக்கொள்ள முடியாமல் வெறுப்பில் வெடித்துச் சாகும் இந்திக்காரர்கள், அதை இந்தியில் மொழிபெயர்த்துப் பாடினார்கள் என்றால், தமிழகக் காங்கிரசு மேடைப் பேச்சாளர்கள் என்ன பெயரால் அழைக்கப் போகிறார்கள்?'

அது தேசத் துரோகம் அல்லவா? இப்போது புரிகிறது, தேசியச் சின்னம் வடநாட்டு அசோகனின் ஆணைச் சக்கரமாக—அறச் சக்கரமாக இருப்பதால் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் போலும்!

சோழர் கோயில் கோபுரம் அந்த இடத்தில் இருந்திருக்குமானால், இவர்கள் எப்படித் துடிப்பார்கள் என்பது நமக்குப் புரிகிறது!

பல்வேறு மொழியினரை—பல்வேறு கலாச்சாரங்களை—பல்வேறு பண்பு நலன்களைத் தாங்கிக் கொள்வதிலேதான் சிறப்பே இருக்கிறது என்பது பண்டித நேருவே சொன்ன வாசகம்! இந்தப் பாரத புத்திரர்களுக்கு அதுகூட மறந்து விட்டது!

இந்திக்காரர்கள், வினை விதைத்துக்கொண்டிருக்கிறார்கள்! விளைவு, விபரீதமாகவே இருக்கும்! ஏற்கனவே மக்களின் மனத்தளத்தின் அடியில் கனன்று கொண்டுள்ள இந்த மொழி உணர்வுத் தீக்குக் காற்றாக இருந்து விசிறிக்கொண்டிருக்கிறார்கள்—இந்தி வெறியர்கள்!

இது, 'அபத்தமான விளையாட்டு—ஆபத்தான விளையாட்டு' என்பதைத் தமிழகக் காங்கிரசுக்காரர்கள் தங்கள் மேடைகளில் முழங்குவார்களா?

—பூரணன்

# இந்திரா வருகையும் புறப்பாடும்--

## தமிழகக் காங்கிரசின் சிந்தனைக்குச் சில கருத்துக்கள்

'ஓ! நீங்களும் வந்திருக்கிறீர்களா?' என்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கிய இந்திரா, காமராசரை நோக்கி வியப்புடன் வினவியதில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு!

'நீயுமா புரூட்டஸ்?' என்ற ஷேக்ஸ்பியரின் கவிதை வரிகள் தானே ஜூலியஸ் சீசர் காவியத்தின் உயிர்நாடி?

தலைமையமைச்சரின் கொடைக்கானல் ஓய்வு, சாதாரணமான வருகை -- புறப்பாடு ஆக இருக்கலாம்—அதிகார முறையில்; ஆனால் அரசியல் ரீதியில், இந்திராவின் தமிழகப் பயணம், உற்றுக் கவனிக்கத் தகுந்ததோர் நிகழ்ச்சியாகும்.

'இந்திராவின் வருகையின்போது தமிழ்நாடு காங்கிரசு தலைமறைவாகிவிட்டதோ' என்று ஐயுறும் அளவுக்கு, அது, 'அரசியல் விலாச'மின்றி ஒப்ந்து ஒடுங்கியிருந்தது குறிப்பிடத்தக்க மாற்றமாகும்!

இந்திரா இந்த ஆண்டு ஓய்வினைத் தமிழகத்தில் வைத்துக்கொள்ள முடிவுசெய்தபோதே, இங்குள்ள காங்கிரசுக்காரர்களின் நெஞ்சம், 'இருக்கின்ற வேதனையில்

எஸ். ஆர்.

இது வேறா?' என்று துணுக்குற்றதை, 'அரசியல் நாடித துடிப்பு'த் தெரிந்தவர்கள் உணர முடிந்தது!

அதை உறுதிப்படுத்தும் வகையில், கழக ஆட்சி வெற்றி நடை போடும் தமிழகத்துக்கு 'தலைமை யமைச்சராக'த்தான் இந்திரா வந்து சென்றாரே தவிர, ஒரு 'காங்கிரசுக்காரராக'த் தன்னைக் காட்டிக் கொள்ளாமலே இருந்தார்!

இது, இங்கே உள்ள காங்கிரசுக்கு ஒரு முதல்தரமான ஏமாற்றம்!

(3-ம் பக்கம் பார்க்க)

# ஏழைகள் நல்வாழ்வே அரசின் குறிக்கோள்

"ஏழை எளிய மக்களுக்கும் உண்மையான விவசாயிகளுக்கும் நன்மை செய்யவே கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிறது.

"உழைக்காமல் யார் பயன் அடைந்தாலும் இந்த அரசு அதை ஏற்காது! இதன் காரணமாகவே காங்கிரசார், எங்கள் மீது குறைகூறிப் பேசி வருகிருர்கள்!

"ஏழை மக்கள் பயனடைவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், பாங்கிகள் நாட்டில் தோற்றுவிக்கப்பட்டன; ஆனால் இன்று நிலப்பிரபுக்களும் வசதிபடைத்தவர்களும் பயனடைவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், பாங்கிகள் நாட்டில் இயங்குகின்றன.

"இவைகளை ஏழை எளிய மக்கள் பயனடையத்தக்க முறையில் சீர்திருத்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது!

"புஞ்சை நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளித்ததன் மூலம் அரசின் வருமானத்தில் ஒரு கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. இத்துடன் அரசு நின்றுவிடவில்லை; அடுத்த ஆண்டு நஞ்சை நிலங்களுக்கும் வரியிலிருந்து விலக்கு அளிக்கலாமா என்பது பற்றியும் யோகித்து வருகிறது.

"இந்த நிலையில்தான், ஆலை அரசர்கள்—பஸ் அதிபர்கள்—மிட்டா—மிராசுகள் புடைசூழ வந்து கொண்டிருந்த கொங்கு நாட்டுச் சிங்கம் சுப்பிரமணியம் அவர்கள், இன்று ஏழைகளுக்குப் பாடுபடப் போவதை மேடை தோறும் முழங்கி வருகிருர்! இதை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது!

"நாங்கள் யாருடைய தயவிலும் இல்லை; காரணம் ஏழை எளிய மக்கள்—உழைப்பாளிகள் எல்லோரும் எங்கள் பக்கம் இருக்கிருர்கள்!"

---அமைச்சர் செ. மாதவன்

(குன்னத்தூர் கூட்டத்தில்)

★

## தொழிலாளர் நல அரசு!

"தொழிற் சட்டங்களுக்கு விரோதமாக தொழிற்சாலைகள் நடந்து வருகின்றன. இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

"இந்த அரசு, தொழிலாளர்களுக்கு விரோதமான அரசு அல்ல என்பதைத்தொழிலாளர்களே புரிந்துகொண்டுவிட்டார்கள்!

"இனித் தொழிலாளர்கள், அரசைப் பற்றிக் கவலைப்படாமல், எந்த முறையில் செயல்பட்டால் நமக்குள்ள உரிமைகளைப் பெறமுடியும்' என்பது பற்றிக் சிந்திக்க வேண்டும்.

"யார் எந்தக் கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர் தொழிலாளர்களின் நன்மைக்குப் பாடுபட்டால், அவர்கள் எல்லாம் நம்மவர்களே!"

## முரண்பாடுகளைத் தவிர்க்க வழக்கறிஞர்கள் ஆலோசனைகள் கூறட்டும்!

"அரசாங்கம் பல சட்டங்கள் இயற்றுகிறது; அந்தச் சட்டங்களில் உள்ள குறைபாடுகளை வழக்கறிஞர்கள் எடுத்துக்காட்டுவதை தமிழக அரசு விரும்புகிறது!

'இந்திய அரசியல் சட்டத்தில் பல முரண்பாடுகள் இருக்கின்றன; அந்த முரண்பாடுகளை—அவற்றை நீக்கும் வழிமுறைகளைக் கூறலாம்.

"நமது நாடு சனநாயக நாடுதான்; ஆனால் ஒரு கவர்னர், அமைச்சரை வீட்டுக்குப்போகச் சொல்லக்கூடிய உரிமை அரசியல் சட்டத்தில் இடம் தருகிறது.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை வீட்டுக்கு அனுப்ப கவர்னருக்கு அரசியல் சட்டத்தின் மூலம் உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது என்ருல், சனநாயக முறை எப்படி பொருந்தும்? இதுபோன்ற முரண்பாடுகளை தவிர்க்க வழக்கறிஞர்கள் ஆலோசனை கூற முன்வர வேண்டும்."

## தற்போதைய சட்டங்கள் சமுதாயத்திற்கு உதவுகின்றனவா?

"முதலில் சமுதாயம்—பின்னர் தான் சட்டம்; இரண்டும் இன்றியமையாதது.

"சர்வாதிகார நாட்டில் முன்னேற்றம் துரிதமாக இருக்கிறதென்றும், சனநாயக முன்னேற்றம் தாமதமாக இருக்கிறதென்றும் கூறப்படுகின்றது.

"மக்கள் தொகையின் ஒரு பகுதியினரை அழித்துச் சமுதாயம் வாழ வேண்டுமென்பது நியாயமா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

"தற்போதுள்ள சட்டங்கள் சமுதாயத்திற்கு உதவுகின்றதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

"சட்ட மூலமாகச் சமுதாயம் மாற்றப்பட வேண்டுமா அல்லது புரட்சி மூலமா என்பது தான் தற்போது சமுதாயத்தின் முன்னிருக்கும் பிரச்சினையாகும்.

"எந்த ஒரு சமுதாயத்திற்குச் சட்டங்கள் இயற்ற அடிப்படை உரிமை இருக்கிறதோ அதே சமுதாயத்திற்குத் தேவையற்ற சட்டங்களை மாற்றுவதற்கும் உரிமை உண்டு.

"சாதி—மொழி—பழக்க வழக்கங்களில் உள்ள வேற்றுமைகள், வேறுபாடுகள் நீக்கப்பட்டால்தான் சமுதாயமும் நாடும் முன்னேறும்."

---அமைச்சர் செ. மாதவன்

(ஈரோடு நிகழ்ச்சிகளில்)

# வெளிநாட்டுக் கடன்-- ரூ.7,204.44கோடி

புதுடில்லி, ஆக. 27—1967 மார்ச் 31-ம் நாளுடன் முடிவடைந்த நிதி ஆண்டில் ரூ. 7,204.44 கோடி வெளிநாட்டுக் கடன்களுக்காக இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

அமெரிக்கா ரூ. 2,279.68 கோடியும், இரஷ்யா ரூ. 1,021.13 கோடியும், பிரிட்டன் ரூ. 648.90 கோடியும் கடனாக அளித்துள்ளன.

மற்றும் ஆஸ்திரியா, பல்கேரியா கனடா, செக்கோஸ்லோவேகியா, டென்மார்க், கிழக்கு ஜெர்மனி, பிரான்ஸ், அங்கேரி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, போலந்து, சுவிட்சர்லாந்து, யூகோஸ்லேவியா ஆகிய மற்ற நாடுகளும் கடன் அளித்துள்ளன.

சென்ற ஆண்டு ரூ. 1,800 கோடி கடன் உபயோகிக்கப்படாமல் இருந்தது. இவ்வாண்டு கடனை உபயோகிப்பதில் முன்னேற்றம் காணப்பட்டது.

# தமிழகக் காங்கிரசின் சிந்தனைக்குச் சில கருத்துக்கள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"என்ன—இங்கே ஒரே அடக்குமுறையாம்—அச்சுறுத்தலாம்—சட்டம் கிடையாதாம்—அனுமதி இல்லையாம் — பாதுகாப்பு மறைந்துவிட்டதாம் — மத்திய அரசு இனியும் சும்மா பார்த்துக் கொண்டிருக்காது - தெரியுமா?" என்று இந்திரா அதிகாரம் செலுத்துவார்—என்று கூடக் காங்கிரசிலுள்ள 'கடைநிலை'கள் கனவு கண்டிருக்கக்கூடும்!

அந்த அளவுக்கு இல்லையாயினும், 'சும்மா'வாவது அழைத்து ஓர் உயர்மட்ட 'இரகசிய ஆலோசனை' நடத்துவார்—என்று, காங்கிரசின் பெரிய புள்ளிகள் எதிர் பார்த்திருக்கக்கூடும்!

இதற்கெல்லாம் பின்னணியாகத் தான், முன்கூட்டியே 'ஆகஸ்டு 15' ஒத்திகைகூடக் காட்டினுர்கள்!

'பட்டணத்துப் பாஷை'யிலேயே குறிப்பிடுவதென்ருல், இந்திரா, இதில் எதையும் 'கண்டுகொள்ள'வே இல்லை!

'தலைமையமைச்ச'ராக வந்தார்! 'பக்த'ராகக் கோயில் - குளம் கண்டார்; 'தனிப்பட்ட நப'ராக ஓய்வு எடுத்துக்கொண்டார்: மீண்டும், 'தலைமையமைச்சர்' ஆகத் திரும்பியிருக்கிருர்!

'அடியோடு தோற்றுப்போனீர்களே—பாவம்—இப்போது எப்படி இருக்கிறீர்கள்?' என்றே, 'நடக்காதது என்ன நடந்துவிட்டது; ஆகட்டும்; 72-ஐப் பாருங்கள்' என்றே—அனுசரணைக்காகக்கூட நாலு வார்த்தைகளை தமிழ்நாடு காங்கிரசுக்குக் கூறவில்லை!

மதுரைக்குப் போனவர் திரும்புவதற்குள், இங்கிருந்து காமராசர், புதுடில்லிக்குப் போய்விட்டார்!

'இராஜபவன்'த்தில் ஊர் - உலகத்துக்காக—ஒரு முறைமைக்காகச் சென்று பார்த்ததோடு சரி!

கேரளக் காங்கிரசுச் செயலாளர் கூட, கொடைக்கானலுக்கு அவரைத் தேடிவந்து, அரசியல் நிலைமைகளைப் பேசிவிட்டுச் சென்ருராம்!

தமிழகக் காங்கிரசுத் தலைவர் கிருஷ்ணசாமிகூட, விமான நிலையத்திற்குக் கும்பலோடு கும்பலாக வந்து—நின்று—சென்றதோடு சரி!

முன்னுள் முதலமைச்சர் பக்தவத்சலம், தற்போதைய அமைச்சர்களுடன் தலைமையமைச்சர் நிற்கும் ஒரு நிழற் படத்தில் கறுப்புக் கண்ணுடியுடன் தலையை நீட்டிக் கொண்டிருந்தார்! அப்புறம் அவரை எந்தப் படத்திலும் காணேம்—செய்தியிலும் வரவில்லை!

சுப்பிரமணியம் மட்டும் இரண்டு நாள் தங்கியிருந்திருக்கிருர்—கொடைக்கானலில்!

தனிப்பட்ட முறையில்—தனது எதிர்காலத்தைக் கேட்டு நிர்ணயித்துக்கொள்ளும் வகையினதாகத்தான் அந்தச் சந்திப்பும் இருக்கும் என்பதை, பார்வையாளர்கள் உணருகின்றனர்!

இதையல்லாமல், ஆர்.டி. பார்த்தசாரதி என்னும் காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர், செய்தியிலும் படங்களிலும் இந்திராவுடன் தோற்றமளித்தார்! தலைமை அமைச்சருக்கு ஒரு 'கைடு' (Guide) ஆகத்தான் அவர் பயன்பட்டிருக்கிருரே தவிர, கட்சி ரீதியில் எந்த முக்கியத்துவமும் அவர் மூலமும் இருந்திருக்கச் சாத்தியமில்லை!

**"மொரார்ஜி தேசாய் அண்மையில் வந்து சென்றபோது தமிழ்நாடு காங்கிரசிடம் காணப்பட்ட அரசியல் சலசலப்பில், ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இந்திராவின் ஐந்து நாள் பயணத்தில் ஏற்படாதது ஏன்?" என்பதற்கு, என்ன விளக்கத்தை அவர்கள் தர முடியும் என்பதை, அரசியல் பார்வையாளர்களால் உணர முடிகிறது!**

**இந்திராவுக்குத் தமிழகக் காங்கிரசின் மீது மதிப்பில்லையா? பிடிப்பில்லையா? பற்று இல்லையா? பாசம் இல்லையா?**

**அல்லது**

**தமிழ்நாடு காங்கிரசு இந்திராவிடமிருந்து ஒதுங்குகிறதா? விலகுகிறதா?**

**ஏன் இந்த அரசியல் இடைவெளி? எப்படி வந்தது இந்த வெறுமை?**

கட்சித் தலைமையிடம் இந்திரா கொண்டிருக்கும் எண்ணத்தையும், தலைமையமைச்சரிடம் காங்கிரசுத் தலைவர் காட்டும் போக்கினையும் இந்த உண்மைகள், உள்ளது உள்ளபடி தெரிவிப்பதாகவே உணர முடிகிறது!

இரு தரப்பு இயக்கங்களிலும் ஏதோ ஒரு புறக்கணிப்பு—எப்படியோ ஒரு அலட்சியம் தொனிப்பது தெரிகிறது!

பொதுவாழ்வில் வறுமை—அரசியலில் காழ்ப்பு உணர்ச்சி—எண்ணத்தில் மனமாச்சரியம்—ஆகியவற்றின் மொத்த உருவமாகத் திகழும் தமிழ்நாடு காங்கிரசின் நடவடிக்கைகளுக்குத் தலைமையமைச்சர் எவ்வித அங்கீகாரமோ, சாதகமான பிரதிபலிப்போ சிறு அளவும் காட்டவில்லை என்பது பொதுமக்கள் உணர வேண்டிய ஒரு உண்மையாகும்.

'ஓ! நீங்களும் வந்திருக்கிறீர்களா?' என்று இந்திரா தன்னை நோக்கிச் சிரிப்புக் கலந்த வியப்புடன் வினவியதை, பொதுவாழ்வில் இருக்கும்வரை காமராசர் மறக்கமுடியாது—மறக்கவும் கூடாது! அதன் உட்பொருளை மற்றவர் உணருவதை மறைக்கவும் கூடாது!

"தூத்துக்குடி—சேலம் — மத்திய-மாநில உறவு—நிதி ஒதுக்கீடுகள்—மொழிப் பிரச்சினை — இவைகளைப் பற்றி மட்டும் கழக அரசு, இந்திரா வருகையின் மூலம் என்ன பிரதிபலிப்புகளைப் பெற்றுவிட்டது?" என்று காங்கிரசுக்காரர்கள், திசை திருப்பிவிடும் கேள்விகளில் இறங்கத் தேவையில்லை! ஏனெனில், இது, அரசியல் மட்டும் கலந்த விவகாரம் இல்லை! ஆட்சியும்—நிர்வாகமும் சேர்ந்து, ஐந்து ஆண்டுகள்வரை இருக்கப் போகிற ஒரு பிரச்சினை!

தலைமையமைச்சரின் வருகை—புறப்பாட்டினுல், தமிழ்நாடு காங்கிரசின் நிலை என்ன—விளைவுகள் யாவை—என்பது தான், மேலோங்கி நிற்கும் பிரச்சினைகள்!

அந்த அளவில், இந்திராவின் ஐந்து நாள் தமிழகப் பயணம் பற்றி இங்குள்ள காங்கிரசு சிந்திக்கவும் மேற்கொள்ளவும் வேண்டிய படிப்பினைகள் ஏராளம்!

# ஒற்றுமைக் குலைந்துவிடும்!

நாகர்கோயில், ஆக. 26—"தற்போது காணப்படும் மொழிப் பிரச்சினை, நாட்டின் ஒற்றுமையைக் குலைத்துவிடும். ஒரு குறிப்பிட்ட மொழியைக் கற்குமாறு மற்றவர்களை நிர்ப்பந்திப்பது விரும்பத்தக்கதல்ல"

என்று குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி, இங்கு அரிமா சங்கத்தில் பேசுகையில் கூறினுர்.

மொழிச்சிக்கல் பற்றி அவர் மேலும் கூறியதாவது :—

மருத்துவம், பொறியியல், இன்னும் பிற விஞ்ஞானப் பாடங்களில் பயிற்சி பெறுவற்கு ஆங்கிலம், மிக அவசியமான அனைத்துலக மொழியதாகும்."

# திரு. வி. க. சிலை திறப்பு விழா

கல்வியமைச்சர்

## இரா. நெடுஞ்செழியன் பாராட்டு

சென்னை, ஆக. 26—தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் சிலையை கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் திறந்துவைத்தார்.

இந்தச் சிலை சென்னை 60-வது வட்டம் இராயப்பேட்டையிலுள்ள திரு. வி. க. பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. க-வின் சிலை திறப்பு விழாவுக்கு மேயர் இரா. சம்பந்தம் தலைமைவகித்தார்.

மாநகராட்சி மன்ற உறுப்பினர் கோ. இளவரசு வரவேற்புரையாற்றுகையில், 'தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் பிறந்து 85-வது ஆண்டு தொடங்குகிறது! இந்த நாளில் அவருடைய உருவச் சிலையை திறந்துவைப்பது மிகவும் பொருத்தமானதாகும்' என்று கூறினுர்.

சிலையைத் திறந்துவைத்து அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"தமிழ்ப் புலமை பெற்றவர்கள் தொழிலாளர் தலைவராகவும் விளங்க முடியும் என்பது அதிசயமான காரியமாகும். திரு. வி. க. அவர்கள் தொழிலாளர் உரிமைக்காகப் போராடி அவர்களின் உரிமையை நிலைநாட்டி இருக்கிருர்.

'கருத்து வேறுபாட்டுக்கு மதிப்பு அளிக்க வேண்டும்' என்று கூறியவர் திரு. வி. க. அப்போதுதான் சனநாயகம் தழைக்கும்—மக்களாட்சியை மதிக்க முடியும்.

நாட்டுப் பற்றுக்கும் — தாய் மொழிப் பற்றுக்கும் ஒருவரை எடுத்துக் காட்டாகக் கூற வேண்டுமானுல், திரு. வி. க. அவர்களைத்தான் கூற முடியும்."

மாநகராட்சி ஆணையர் அம்பாசங்கர் நன்றி கூறினுர்.

# சமுதாய நலச் சீரமைப்புத் திட்டம்

## 'விரைவில் செயல்படுத்தப்படும்' அறிஞர் அண்ணு தகவல்

திருச்சி, ஆக. 26—"சமுதாய நலத் திட்டச் சீரமைப்பை இன்னும் சுமார் 3 திங்களில் தமிழக அரசு செயல்படுத்தும்"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் கூறினுர்கள்.

சீரமைப்புத் திட்டத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர்களிடமும், அவர்களின் எண்ணங்களைக் கூறுமாறு கேட்டிருப்பதாகவும், அவர்களுடன் ஆய்வு செய்வதற்காக நாள் விரைவில் தீர்மானிக்கப்படும் என்றும் அண்ணு அவர்கள் கூறினுர்கள்.

# 4,000 ஏக்கர் நிலத்தில் நிலக்கடலைச் சாகுபடி

## சேலம் மாவட்டத்தில் தீவிர நடவடிக்கை

ஏற்றுமதிப் பொருளை அதிகப்படுத்தும் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 4,000 ஏக்கர் நிலத்தில் வேர்க்கடலையைத் தீவிரமாக சாகுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி வைப்பதற்கு ரூ. 100 முதல் ரூ. 125 வரை கடன் உதவி அளிக்கவும் நல்ல விதைகள் கொடுத்து உதவவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை சேலம் மாவட்ட ஆளுநர் விசுவநாதன் செய்தியாளர்களிடம் கூறினுர்.

# மலேசியாவுக்கு இன்று பத்தாவது சுதந்தர நாள்

## துங்கு தலைமையில் துரித வளர்ச்சி

### பொருளாதார முன்னேற்றத்தில் பிரமிக்கத்தக்க சாதனைகள்

**'ஆசியாவின் இளைய நாடு' மகிழ்ச்சியில் திளைக்கிறது!**

1957 செப்டம்பர் 30-ல் கோலாலம்பூரில் சுதந்தரக் கொடியேற்றி வைத்து மலேசியாவின் சுதந்தரப் பயணத்தைத் துவக்கிவைத்த துங்கு அப்துல் ரகிமான், இன்று அந்த நாட்டின் பத்தாவது விடுதலை நாள் விழாவுக்கும் தலைமை தாங்குகிறார்.

'மகிழுங்கள்; மகிழ்ச்சியைப் பெருக்குங்கள்' என்ற தாரக மந்திரத்தை மக்களுக்கு வழங்கிய துங்குவின் ஆட்சிக் காலத்தில், மலேசியா, பெருமைப்படத்தக்க முன்னேற்றங்களைப் பெற்றிருக்கிறது.

" ஆசியாவில் விடுதலை பெற்ற வேறு எந்த நாடுகளும் பத்தாண்டுக் காலத்தில் இத்தகைய நிலையான துரித வளர்ச்சியைப் பெற்றதில்லை" என்று பொருளாதார நிபுணர்களும், அரசியல்வாதிகளும் ஒருசேர மலேசியாவின் முன்னேற்றம் பற்றி ஒப்புக்கொள்கின்றனர்.

உலகப் போருக்குப் பின், ஆங்கிலேயர் அங்கே ஆக்கிரமித்த போதுதான் அந்த மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியே வந்தது!

'விடுதலை' என்ற உணர்ச்சி அந்த நாட்டுக்கு மிக அண்மைக் காலத்தில்தான் எழுந்தது!

மலேசியாவின் விடுதலைக்கு இந்தியா, சீனா ஆகிய நாடுகள் ஆதரவு தந்தன!

1950-க்குப் பின்னர், எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு சுதந்தரத்துக்காகப் பாடுபட்டன. பெரும் சிரமம் இருதரப்பாருக்கும் இன்றி 1957-ல் இங்கிலாந்திலிருந்து விடுதலைபெற்றது மலேசியா!

ரப்பர், அன்னாசிப் பழம், எண்ணெய்ப் பொருள்கள், இரும்பு, எஃகு, தகரம் ஆகிய பொருள்கள்—மலேசியாவை, உலகப் பொருளாதாரத்தின் அச்சாணி நாடாக்கியுள்ளன! டாலர்களும், ஸ்டர்லிங்குகளும் அந்நாட்டைத் தேடிவருகின்றன!

உலக மார்க்கெட்டுகளில் அவ்வப்போது தோன்றிய ரப்பர் விலைச்சரிவு—அபிவிருத்தித் திட்டங்களின் செலவு அதிகரிப்பு—வாழ்க்கைச் செலவு உயர்வு—பெரிய நிதிநிலைத் திட்டங்கள் ஆகிய அத்தனைப் பாதகக் கூறுகளையும் எதிர்த்து நின்று நீச்சல் போட்டு, மலேசியா, ஒருமித்த பொருளாதார முன்னேற்றம் பெற்றிருக்கிறது – பத்தாண்டுக் காலத்திற்குள்!

**1957-ல் 4,305 மலேசிய டாலர்களாக இருந்த தேசிய வருமானம், இப்போது 9,305 டாலர்களாக அதிகரித்திருக்கிறது!**

**1957-ல் 685 மலேசிய டாலர்களாக இருந்த தனி நபர் வருமானம், இப்போது 962 மலேசிய டாலர்களாக உயர்ந்திருக்கிறது!**

**மூன்று சதவிகித மக்கள் தொகை உயர்வினைக்கொண்ட மலேசிய மக்களின் வருமானம், பத்தாண்டுக் காலத்திற்குள் 40 சதவிகித உயர்வினைப் பெற்றிருக்கிறது!**

[பருவ மழை மட்டும் பெய்தால் இந்தியாவின் தேசிய வருமானத்தை 13 சதவிகிதம் உயர்த்திக் காட்டுவதாக அண்மையில் அசோக மேத்தா கூறியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது.]

இத்தனைக்கும், மலேசியாவுக்கு அரசியல் தங்கு தடைகள் இல்லாமல் இல்லை!

மூன்றாண்டுகள் இந்தோனேஷியாவின் எதிர்ப்பைச் சமாளித்தது! ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்த இராணுவச் செலவை ஏற்றது!

இருந்தும், அரசியலுக்கு நிரந்தரத் தன்மை அளிக்கக்கூடிய பொருளாதார முன்னேற்றம் மலேசியாவில் ஏற்பட்டது!

இந்தியாவைப் போலவே பிரிட்டிஷ் பாராளுமன்ற சனநாயக முறையினைப் பெற்ற மலேசியாவில், ஆங்கிலம்—மலாய்—தமிழ்—சீனம் ஆகிய அனைத்தும், மாணவர்களுக்கு இலவசக் கல்வி மூலம் அளிக்கப்படுகிறது.

தொழிற்சாலைகள்—அதிக அளவு பயிர் நிலங்கள்—வானளாவும் கட்டிடங்கள்—நவீன சாலை வழிகள்—மின்சார வளர்ச்சி — ஆகியனவற்றுக்குப் பெயர் பெற்ற மலேசியா நிர்வாகத்தில், இந்தியர்களுக்குக் குறுப்பாகத் தமிழர்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

துங்கு அப்துல் ரகிமானைப் போலவே மலேசிய இந்தியர்களின் நலனில் அக்கறை கொண்ட ஒரு தலைவராக வி. டி. சம்பந்தம் இருக்கிறார்! அவர், மலேசிய அரசின் ஒரு அமைச்சரும்கூட!

# அம்மையார் அமைச்சரவையில் மேலும் ஓர் அம்மையார்!

சில நாட்களுக்கு முன்னர் தலைமையமைச்சரைச் சந்தித்த பின்னர், திருமதி தாரகேசுவரி சின்கா, மத்திய அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்ற செய்தி புதுடில்லி வட்டாரங்களில் பேசப்படுகிறது.

காங்கிரசு வட்டாரத்திலேயே உள்ள கோஷ்டி முகாம்களில், திருமதி தாரகேசுவரி சின்கா ஒரு பிரசித்தி பெற்ற விமர்சகர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேருவின் அமைச்சரவையில் திருமதி சின்கா, துணை நிதி அமைச்சராகப் பதவி வகித்திருக்கிறார்!

தென்னகப் பல்கலைக் குழுவின் மற்றொரு புதிய கலை நிகழ்ச்சி அரங்கேற்றம்

★

3--9--67 ஞாயிறு மாலை 6 மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
மு. கருணாநிதி
அவர்கள் முன்னிலையில்

சதாசிவம் — மோகனா குழுவினரால்
'ஆளுகின்றார் அண்ணா'
என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்.

விவரங்களுக்கு :—
மு. வரதராசன், 325, திருவல்லிக்கேணி ஐரோடு, சென்னை-5

# நெல் விளையும் நிலத்தில் வாழை போடக்கூடாது!

## உணவுப் பெருக்கத்துக்குப் பாதகம் விளைவிப்போர்மீது நடவடிக்கை

### நெல்லை நீர்ப்பாசன மாநாட்டில் அமைச்சர் கருணாநிதி எச்சரிக்கை

திருநெல்வேலி, ஆக. 28—

"நெல் விளையும் நன்செய் நிலங்களில் வாழை பயிரிட அனுமதிக்கப்படமாட்டாது; உணவு உற்பத்திக்குப் பாதகம் ஏற்படுத்தக்கூடிய அத்தகைய செயலில் ஈடுபட எவராவது முனைந்தால் அவர்கள்மீது சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு ஆராயும்"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி இங்கு எச்சரிக்கை விடுத்தார்.

வட நெல்லை மாவட்ட நீர்ப்பாசன—நெடுவழித் துறைக் கருத்தரங்கில் அமைச்சர் கலந்துகொண்டார்.

திருச்செந்தூர் வட்டத்தில் தீவிரக் கார் போகம் பற்றியும், கடம்பா ஏரியிலிருந்தும் தொடர்ந்து தண்ணீர் விடுவது குறித்தும் நடைபெற்ற சூடான விவாதங்கள் பற்றி அமைச்சர் குறிப்பிட்டுப் பேசுகையில், 'இப்பிரச்சினை குறித்து தொடர்புடையவர்கள் கூடிப் பேசி, ஓர் உடன்பாட்டுக்கு வர அரசு எல்லாவித முயற்சிகளையும் செய்யும்' என்றார்.

"எந்த ஓர் ஆண்டிலும் 24,000 ஏக்கருக்குமேல் கார் பயிர் வைக்கக்கூடாது என்று முந்திய நாள் தாம் அறிவித்தது, ஒரு தற்காலிக ஏற்பாடே" என்றார் அமைச்சர்.

"தாம்பிரபரணி பாசனத் திட்டத்தின் மேல்—கீழ்ப் பகுதிகளில் உள்ள நிலவுடைமைக்காரர்களின் மாநாடு ஒன்றினை தொடர்புடைய அதிகாரிகள் இரண்டொரு மாதங்களில் கூட்டி இப்பிரச்சினை பற்றி விவாதிக்க ஏற்பாடு செய்வார்கள்; யாருக்கும் எந்தவித இழப்பும் ஏற்படாதவகையில் ஓர் உடன்பாடு செய்துகொள்ளப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இரண்டு நாள் கருத்தரங்கிலும், பேசிய அனைவரும், 'உணவு உற்பத்தியைப் பெருக்க, நீர்ப்பாசன ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும்' என்பதை வற்புறுத்தினர்; இது, பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடியதே ஆகும். மழை நீரைத் தேக்கும் ஏரிகளைப் பொறுத்தே இது முக்கியம்; ஆறுகள் மூலமும் வாய்க்கால்கள் மூலமும் நீர் நிரம்பும் ஏரிகளுக்கு இது தேவையில்லை. ஓடிவரும் நீர் ஒருமுறை தேக்கப்பட்டுவிட்டால் அதுவே பாசனத்துக்குப் போதுமானதாக இருக்கும். அத்தகைய ஏரிகளை ஆழப்படுத்துவதில் சில பொறியியல் துறை இடர்ப்பாடுகளும் உள்ளன. அந்த ஏரிகள் நன்செய் நிலங்களுக்கு நடுவே உள்ளன.

வட நெல்லை மாவட்டத் திட்டத்தில் 19 பாசனத் திட்டங்கள் உள்ளன; அவற்றிற்கு கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் வரை செலவழியும். இத்திட்டங்கள் ஆராயப்பட்டுவருகின்றன; இவை பலவேறு கட்டங்களாக நிறைவேற்றப்படும்."

## நடக்க இருப்பவை

### 31--8--67

**ஒழலூர்**

தி. மு. கழகத் துவக்கவிழா; மாலை 6-மணிக்கு; தலைவர்: ஓ. பி. சுப்பராயன்; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, சி. சிட்டிபாபு எம்.பி., செ,கொ. விசுவநாதன் எம்.எல்.ஏ., செ.எ. பலராமன், மா. நடராசன், சு. குருநாதன், வ. பசுபதி எம்.சி., ஏ. ஆர். அன்சர் எம்.சி., கோ. ஆலாலசுந்தரம், கே. பி. கன்னியப்பன், ஒ. டி. ஏழுமலை, சி. எம். தட்சணாமூர்த்தி.

**மதுரை**

33-வது வட்டார தி.மு.க. சார்பில் மாலை 6-மணிக்கு கீழச்சந்தைப்பேட்டையில்; பேசுவோர்: எஸ். முத்து எம்.எல்.சி., மற்றும் பலர்.

**சூலூர்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பெரியார் திடலில்; தலைவர்: சூ. வீ. காளிமுத்து; பேசுவோர்: மு. இராமநாதன், மு. தமீம், கேரளசுந்தரம், பெ. பெரியசாமி, மற்றும் பலர்.

**ஆறுபாதி**

எம். ஜி. ஆர். மன்றத் திறப்பு விழா; மாலை 6-மணிக்கு மதகடியில்; தலைவர்: ரெ. சீனிவாசன்; மன்றத் திறப்பாளர்: நடிகர் கே. கண்ணன்; எம். ஜி. ஆர். படத் திறப்பாளர்: நடிகர் சி. எல். ஆனந்தன்; பேசுவோர்: என். கிட்டப்பா எம்.எல்.ஏ., எஸ். கணேசன் எம்.எல்.ஏ., கே. சுப்ரவேலு எம்.பி., தம்பி ஏ. தேவேந்திரன் எம்.சி., வை. மச்சிநாதன், மதிவாணன், வி. எஸ். வாசன்.

## நல்லூர் கால்நடை மருத்துவமனை

### அண்ணா திறந்துவைப்பார்

நல்லூர் ஊராட்சி ஒன்றியம் கால்நடை மருத்துவமனைத் திறப்பு விழா, 1—9—67 மாலை 6–15 மணிக்கு வேளாண்மை அமைச்சர் ஏ. **கோவிந்தசாமி** தலைமையில் நடைபெறும்; முதலமைச்சர் **அறிஞர் அண்ணா** திறந்துவைப்பார்.

## கலைவாணர் விழா

கலைவாணர் என். எஸ். கே. நினைவு விழா, 31 8–67 மாலை 5-30 மணிக்கு அமைச்சர் மா. முத்துசாமி தலைமையில் நடைபெறும்; டாக்டர் சி. இலக்குவனார், கொத்தமங்கலம் சுப்பு, சாவி, மற்றும் பலர் கலந்துகொள்வர்; பத்மினி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெறும்; இடம்:—தியாகராய நகர் வாணிமகால்.

## சென்னை 78-வது வட்ட ஆயிரம்விளக்குப் பகுதி

### தி. மு. க. நிர்வாகிகள் கூட்டம்

"சென்னை 78-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கள்—ஆயிரம் விளக்குப் பகுதிக் கிளையின் நிர்வாகிகள் ஆகியோரின் கூட்டம், 4—9—67 இரவு 8 மணிக்கு 'அன்பகத்'தில், அமைப்புச் செயலாளர் **என்.வி. நடராசன்** எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்" என்று, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

## நூல் வெளியீட்டு விழா

பாரி புத்தகப் பண்ணை சார்பில் அ. வெ. நடராசன் எழுதிய இயேசுநாதர் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா, 1—9—67 மாலை 7-மணிக்கு சென்னை எஸ்பிளனேடு ஒய. எம். சி. ஏ. பட்டிமன்றத்தில் நடைபெறும்; திரு. ஆர். அருளப்பா தலைமையில், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் நூலை வெளியிடுவார்; திருவாளர்கள் ஆ. ஜோ. அடைக்கலம், அகிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

## பாரதிதாசன் பேத்தி திருமணம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பேத்தியான செல்வி தமிழ்ச் செல்வத்துக்கும் — நல்லாற்றூர் திரு. சு. தணிகாசலம் அவர்களின் மகன் செல்வன் முத்தையாவுக்கும் 1—9—67 காலை 9 மணிக்கு, நல்லாற்றார் மணமகன் இல்லத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் திருமணம் நடைபெறும்; திருவாளர்கள் சி. பா. ஆதித்தனார், ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ, வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., கி. வீரமணி, நாவரசு, பொன்னடியான், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

## தருமபுரியில் தொழில் பேட்டை

### முதலமைச்சர் தகவல்

கோவை, ஆக. 22

"தருமபுரியில் விரைவில் தொழில்பேட்டை ஏற்படும்"—என்று, ரூ. 14 இலட்சம் செலவில் கட்டப்பட்ட மாவட்ட ஆளுநர் செயலகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13,) அச்சிட்டு வெளியிடப்பட்டது.